வாரம். - 1 ஊக்கப் பாடல்கள் எண் - 1



நான்கு வரிகள் / ஆறு வரிகள் உடைய பாடல்களை இசையோடு, ஆடிக் கொண்டே பாடப் பயிற்சி தரவும்

## வாரம். - 1 கைநெகிழ்வுப் பயிற்சி எண் - 1

நேர் கோட்டுப் படங்கள் ( தனியாக எழுதுபலகையில் எழுதிப் பழகவும் )



வளை கோட்டுப் படங்கள் ( தனியாக எழுதுபலகையில் எழுதிப் பழகவும் )



நேர்கோடு / வளைகோட்டுப் படங்களை இயல்பாக வரைய ஊக்குவிக்கவும்

வாரம். - 1 பாட அறிமுகம் எண் - 1




அழகாக எழுதவும் ஒலிக்கவும் பயிற்சி தரவும்

# வாரம். - 1

## மாணவர் செயற்பாடு எண் - 1

**மாணவர் பெயர் .................................. நிலை.......... நாள்.............**

( கற்றுக்கொண்ட எழுத்துகளைச் செய்தித்தாளில் வட்டமிடவும்)

# பழைய வரலாற்றை மாற்றுவார்களா புதிய வே

## வேலூர் மாவட்ட நிலவரம்

வேலூர் மாவட்டத்தில் உள்ள, 13 தொகுதிகளில், ஐந்து தொகுதிகளின் நிலையை நேற்று பார்த்தோம். மீதமுள்ள எட்டு தொகுதிகளின் நிலை இது.

**அரக்கோணம் (தனி):** இந்த தொகுதியில் அ.தி.மு.க., சார்பில் ரவி, விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் செல்லப்பாண்டியன் களத்தில் உள்ளனர். ஏற்கனவே தி.மு.க., கூட்டணியில் இங்கு எம்.எல்.ஏ.,வாக, சென்னையைச் சேர்ந்த புரட்சி பாரதம் கட்சி ஜெகன்மூர்த்தி இருந்தார். வெற்றி பெற்ற பிறகு, தொகுதிப் பக்கமே தலை வைத்துப் படுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது.

'வெளியூர் வேட்பாளர்களை நிறுத்தினால் ஓட்டு போட மாட்டோம்' என தொகுதியில் உள்ள அனைத்துக் கட்சியினரும், பொதுமக்களும் கூறிவருவதால், அ.தி.மு.க., வேட்பாளர் ரவிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

**: முக்கிய தொழில் :**

தோல் தொழிற்சாலைகள், நூற்பாலைகள், தீப்பெட்டி, பீடி தொழிற்சாலைகள், விவசாயம்.

**கே.வி.குப்பம் (தனி):** இந்த தொகுதியில் அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள இந்திய குடியரசுக் கட்சி மாநிலத் தலைவர் செ.கு.தமிழரசன், தி.மு.க., வேட்பாளர் சீதாராமன் களத்தில் உள்ளனர். இதில், சீதாராமன் கே.வி.குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் தலைவராக இருந்த போது எந்த வித வளர்ச்சிப் பணிகளும் செய்யவில்லை என்பதால், பொதுமக்களின் அதிருப்திக்கு ஆளாகியிருக்கிறார்.

அமைச்சர் துரைமுருகனுக்கு வெற்றி வாய்ப்பைத் தந்த இந்த தொகுதியில், எந்தவித வளர்ச்சிப் பணிகளும் நிறைவேற்றப்படவில்லை என்பதாலும், சொந்த ஊரைச் சேர்ந்த தமிழரசனே களத்தில் நிற்பதாலும், அவருக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது.

**குடியாத்தம் (தனி):** தி.மு.க., சார்பில் ராஜமார்த்தாண்டன், அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த லிங்கமுத்து ஆகியோர் இங்கு களத்தில் உள்ளனர். இதில் ராஜமார்த்தாண்டன் தேர்தலுக்கு புதியவர்.

மேலும், அக்கட்சியினர் அவருக்கு சரியாக ஒத்துழைப்பு கொடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் பல தேர்தல்களைச் சந்தித்துள்ளதால், கடுமையாகப் போராடினால் தான் தி.மு.க., வெற்றி பெற முடியும்.

**அணைக்கட்டு:** பா.ம.க., சார்பில் கலையரசனும், தே.மு.தி.க., சார்பில் வேலுவும் இங்கு களத்தில் உள்ளனர். இத்தொகுதி வன்னியர்களின் கோட்டை. ஆனால், நாயுடுவான பாண்டுரங்கன் இங்கு இரண்டு முறை வெற்றி பெற்றுள்ளார். ஐந்தாண்டுகளாக தொகுதி பக்கமே வராதது 'சிட்டிங்' எம்.எல்.ஏ., பாண்டுரங்கனுக்கு மைனஸ் பாயின்ட். தி.மு.க., ஒன்றியச் செயலர் பாபு மூலம் தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் அசுர வேகத்தில் மேற்கொள்ளப்பட்டதால், தி.மு.க., கூட்டணியில் உள்ள பா.ம.க., வேட்பாளர் கலையரசனுக்கு வெற்றி வாய்ப்பு உள்ளது.

**ஆம்பூர்:** காங்கிரஸ் சார்பில் மறைந்த முன்னாள் எம்.பி., ஜெயமோகன் மகன் விஜய் இளஞ்செழியனும், இவருக்கு போட்டியாக முன்னாள் காங்கிரஸ் எம்.எல்.ஏ.,வுமான பாலூர் சம்பத்தும், அ.தி.மு.க., கூட்டணியில் உள்ள, மனித நேய மக்கள் கட்சி வேட்பாளர் அஸ்லம் பாஷாவும் இங்கு களத்தில் உள்ளனர். காங்கிரஸ் ஓட்டு பிரிவதால், இவர்கள் இருவரும் முஸ்லிம் ஓட்டுகளை நம்பித் தான் உள்ளனர். ஆனால், மனிதநேய மக்கள் கட்சி போட்டியிடுவதால், பிரசார பலம், பணபலத்தை நம்பித் தான் வெற்றி என்ற நிலை உள்ளது.

**வாணியம்பாடி:** தி.மு.க., கூட்டணியில் அங்கம் வகிக்கும் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக்கை சேர்ந்த 'சிட்டிங்' எம்.எல்.ஏ., அப்துல் பாசித்தும், அ.தி.மு.க., வேட்பாளர் சம்பத்குமாரும் போட்டியிடுகின்றனர். அப்துல் பாசித் மீது தொகுதியில் கடும் அதிருப்தி



## வாரம். - 1

## மாணவர் செயற்பாடு எண் - 2

**மாணவர் பெயர் .................................. நிலை.......... நாள்..............**

( கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிப் பழகவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ட | ட் | ட | ட் | ட | ட் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

# வாரம். - 1

## வீட்டு வேலை எண் - 1

**மாணவர் பெயர் ................................... நிலை........... நாள்...............**

( கற்றுக்கொண்ட எழுத்துகளைக் கீழே எழுதிக் கொண்டு வரவும் )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ட | ட் | ட | ட் | ட | ட் |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |